உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 30.07.2026 • மலர் 04 • இதழ்: 211 • வியாழன் • Edition : Nagercoil • 30.07.2026 • Vol : 04 • Issue : 211 • Page : 4 • Rs. 5/-

# அசாமில் வெள்ளத்தால் 4.45 லட்சம் பேர் பாதிப்பு

## மீட்புப் பணி, நிவாரணம் குறித்து பிரதமர் மோடி ஆய்வு

புதுடெல்லி: அசாம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக பிரம்மபுத்திரா, தன்சிறி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மழை, வெள்ளம் காரணமாக 12க்கும் மேற்பட்ட மாவட்டங்கள்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் வெள்ளத்தால் 4.45 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில்தங்கியுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு, போர்வை உள்ளிட்ட வசதிகளை மாவட்ட நிர்வாகங்கள் வழங்கி வருகின்றன. இந்நிலையில், அம்மாநிலம் முழுவதும் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளது. வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் ஈடுபட்டனர்.

அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளும் அவர்கள் செய்து வருகின்றனர்.

இதையடுத்து டெல்லியில் நேற்று அசாம் மாநில எம்.பி.க்கள், மாநில அதிகாரிகளுடன் மழை, வெள்ள மீட்புப் பணிகள் குறித்து பிரதமர் நரேந்திரமோடி ஆய்வு நடத்தினார். அப்போது, பாதிக்கப்பட்டுள்ள 4.45 லட்சம் மக்களுக்கு செய்யப்பட்டுள்ள உதவிகள், நிவாரண முகாம்களின் நிலை குறித்து பிரதமர் மோடி கேட்டறிந்தார்.

தற்போது வரை அங்கு 631 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.



## ‘வந்தே மாதரம் பாடலை அவமதித்தால் 3 ஆண்டு சிறை’ மாநிலங்களவையில் மசோதா நிறைவேற்றம்

புதுடெல்லி, ஜூலை;30

வந்தே மாதரம் பாடலை அவமதித்தால் மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை வழங்க வழிவகை செய்யும் மசோதா மாநிலங்களவையில் நேற்று நிறைவேறியது. வந்தே மாதரம் பாடலை அவமதித்தால் மூன்று ஆண்டுகள் சிறைதண்டனைவழங்கவழி வகுக்கும் 'தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதா 2026'ஐ கடந்த 24ம் தேதி மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தினார்.

இதன் மூலம் வந்தே மாதரம் பாடலை வேண்டும் என்றே தடுப்பது அல்லது குழப்பம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவது இந்த மசோதாவின் மூலம் குற்றமாக கருதப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கிய பங்காற்றிய வந்தே மாதரம் பாடலின் கண்ணியத்தையும், பெருமையையும் பாதுகாப்பதே இந்த சட்டத்தின் நோக்கம் என மத்திய அரசு விளக்கமளித்திருந்தது.

இந்த மசோதா மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், மசோதாவை வரவேற்று பேசிய பாஜகவினர்,

"சமீபகாலமாக வந்தே மாதரம் பாடல் நாடு முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றுபெற்றுள்ளது.எனவே எங்கு பாடப்பட்டாலும் அதற்குரிய மரியாதையை நாம் கொடுக்க வேண்டும் என்பதே சரியான நடமுறையாக இருக்கும்" என்றனர்.

இதற்கிடையே இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

"பாடல் பாடுவதை குற்றவியல் சட்டத்துடன் இணைப்பது தவறானது. இந்த சட்டத் திருத்தம் பேச்சுரிமை, தனி மனித சுதந்திரம் மற்றும் வழிகாட்டு உரிமையை வழங்கும் அரசியல் சாசன பிரிவுக்கு எதிரானது. குடிமக்கள் கட்டாயம் தேசப் பற்றைகாட்ட வேண்டும் என அரசியல் சாசனம் எங்கும் கூறவில்லை" என்றும் அதிருப்தி தெரிவித்தனர்

இந்நிலையில், இந்த மசோதா நேற்று மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. விரைவில் இந்த மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றப்பட்டால், குடியரசுத்தலைவரின்ஒப்புதலை பெற்ற பிறகு சட்டமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரும் பணி அமைச்சர் என்.ஆனந்த் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை:30 : வெள்ள பாதிப்புகளைத் தடுக்கவும், நீர்நிலைகளைச் சீரமைக்கவும் சென்னை அடையாறு ஆறுமற்றும்தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரி சீரமைக்கும் பணிகளை அமைச்சர் என்.ஆனந்த் தொடங்கி வைத்தார்.




சென்னையின் முக்கிய ஆற்றுப் படுகையான அடையாறு ஆறு, செம்பரம்பாக்கம் ஏரி உபரி நீர் மற்றும் மழைநீரை கடலுக்குக் கொண்டு செல்லும் முக்கிய வழித் தடமாகும். தற்போது, இந்த ஆற்றின் சில பகுதிகளில் ஆகாயத்தாமரைகள் மற்றும் மிதவைப் பொருட்கள் தேங்கி நீரோட்டம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைச் சீரமைக்கும் வகையில் , நேற்று காலை மணப்பாக்கம் அடையாறு ஆற்றுப் பகுதியில் தூர்வாரும் பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் நீர் வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த் தொடங்கி வைத்தார்.

நீர்வளத்துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளும் இப்பணியால், விமான நிலைய ஓடுபாதை முதல் திருவிக பாலம் வரை நீரோட்டம் சீராகும்.

இதன்மூலம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், கோடம்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, கோட்டூர்புரம் மற்றும் மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் வெள்ள அபாயம் நீங்கி, மழைநீர் தடையின்றி செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள தெற்கு பக்கிங் ஹாம் கால்வாயில் சீரமைப்புப் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்து தொடங்கி வைத்தார்.

பழைய மாமல்லபுரம் சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலை இணைப்பு மேம்பாலம் அருகே அமைந்துள்ள இக்கால்வாயில், பள்ளிக்கரணை மற்றும் ஒக்கியமடுவு பகுதிகளில் இருந்து அடித்து வரப்படும் ஆகாயத் தாமரைகள் பெருமளவில் தேங்கியுள்ளன.

இதனால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் கொசுத் தொல்லையால் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகி வந்தனர். பெருநிறுவனப் பங்களிப்பு மற்றும் தன்னார்வலர்களின் உதவியுடன் இந்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.




## குமரியில் 10 இடங்களில் ஏ.ஐ. தொழில்நுட்ப கேமராக்கள் போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

நாகர்கோவில், ஜூலை.30

குமரி மாவட்ட காவல் துறை சார்பில் "விபத்தில்லா குமரி" என்னும் இலக்கை அடையும் நோக்கில், 'காவல் ஏ.ஐ.' என்ற. தானியங்கி போக்குவரத்து விதிமீறல் கண்டறியும் நவீன கேமரா ஏற்கனவே நாகர்கோவில் கலெக்டர் அலுவலக சந்திப்பில் நிறுவப்பட்டுள்ளது. இதேபோன்று மாவட்டத்தில் மேலும் 10 இடங்களில் தானியங்கி போக்குவரத்து விதிமீறல் கண்டறியும் நவீன கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நாகர்கோவில் வடசேரி மீன்சந்தை சந்திப்பு, அப்டா மார்க்கெட், 'செட்டிகுளம் சந்திப்பு, பார்வதிபுரம், கருங்கல் சந்திப்பு, திருத்துவபுரம், அழகிய மண்டபம், தக்கலை சந்திப்பு, அஞ்சுகிராமம், கன்னியாகுமரி விவேகானந்தபுரம் ஆகிய 10 இடங்களில் இந்த நவீன கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று (புதன்கிழமை) காலை 10 மணி அளவில் நாகர்கோவில் வடசேரி மீன்சந்தை சந்திப்பு பகுதியில் நடைபெற்றது. மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் கூறியதாவது: குமரி மாவட்டத்தில் விபத்துகளை குறைக்கும் வகையில் மாவட்ட போலீசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அபராதம் விதிப்பது மட்டும் காவல்துறையின் நடவடிக்கை அல்ல. விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். நாகர்கோவில் கலெக்டர் அலுவலக சந்திப்பில் ஏற்கனவே தானியங்கி கேமரா வைக்கப்பட்டு இதுவரை 4500 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைக்கு பின் நாகர்கோவில் மாநகரில் ஹெல்மெட் அணிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

தற்போது மேலும் 10 இடங்களில் ஏஐ தொழில்நுட்ப கேமராக்கள் செயல்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இதன் மூலம் இன்னும் கூடுதலாக ஹெல்மெட் அணிவார்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என நம்புகிறோம். குமரி மாவட்டத்தில் 70 சதவீத உயிரிழப்புகள் தலைகாயத்தால் தான் நிகழ்கின்றன.

இதை தடுக்கும் வகையில் தான் இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பொது மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். என அவர் கூறினார்.

## முதல்வர் விஜய்யை காண உ.பி.யில் இருந்து நடைபயணமாக சென்னை வந்த இளைஞர்

சென்னை: உத்தரபிரதேச மாநிலம் அலிகரை சேர்ந்த அமன்(24) என்ற இளைஞர், தமிழக முதல்வர் விஜய்யின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு அவரின்தீவிர ரசிகராக மாறியுள்ளார்.

விஜய்யை நேரில் சந்திப்பதற்காக உத்தரபிரதேசத்தில் இருந்து நடைப்பயணம் மேற்கொண்டு தற்போது தமிழகம் வந்துள்ளார்.

கடந்த ஜூலை 3ம் தேதி அலிகரில் தனது பயணத்தை தொடங்கிய அமன் சுமார் 25 நாட்களுக்கு பின்னர் நேற்று சென்னை வந்தடைந்தார். தலைமைச் செயலகம் வந்தவரை முறையான முன்அனுமதி இல்லாததால் காவல்துறையினர் அனுமதிக்கவில்லை. இதுதொடர்பாக, அவர் நிருபர்களிடம் கூறுகையில், “தமிழகத்தின் மக்கள் நலன் சார்ந்த ஆட்சிக்காக முதல்வர் விஜய்க்கு நேரில் வாழ்த்து தெரிவிக்க நடைபயணமாக வந்துள்ளேன். மேலும், பலர் தனது பயணத்தின் நோக்கம் குறித்து கேட்டறிந்தனர்.

தேசப்பற்றை வலியுறுத்தும் விதமாக தேசியக் கொடியுடன் பயணம் செய்தேன். முதல்வர் விஜய் தேசிய அரசியலில் பங்காற்ற வேண்டும்.

அவரை சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன்”என்றார்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நியூ டெல்லி மற்றும் ஷாகிராபாத் பகுதிகளில், தனியார் திருமண மண்டபம் மற்றும் வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 20 கிலோ தடை செய்யப்பட்ட ஹான்ஸ், குட்கா, கூலிப் உள்ளிட்ட போதைப் பொருட்களை தனிப்படை காவல்துறையினர் அதிரடி சோதனையில் பறிமுதல் செய்தனர். ரகசிய தகவலின் பேரில் நடைபெற்ற சோதனையின்போது உரிமையாளர் தப்பியோடிய நிலையில், வருவாய்த் துறையினர் முன்னிலையில் மண்டபத்தின் பூட்டை உடைத்து சோதனை நடத்தப்பட்டது. தொடர்ந்து, திருமண மண்டபத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டதுடன் ரூ25,000 அபராதமும் விதிக்கப்பட்டு காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை .

## குமரி பேருந்து நிலைய பணிகள் அமைச்சர், கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஜூலை. 30

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட குலசேகரம், களியக்காவிளை, கருங்கல், ஆலஞ்சி பகுதிகளில் நடைபெற்றுவரும்பேருந்து நிலைய பணிகளை ஆய்வு செய்யும் பணி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமை வகித்தார். பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆர். செல்லசுவாமி, முன்னிலை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்:

பாலப்பள்ளம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட ஆலஞ்சி ஜங்சனில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.83 கோடி மதிப்பில் புதிய பேருந்துநிலையம், களியக்காவிளை பிரதான சந்திப்பில் களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியின் சார்பில் ரூ.9.20 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம், கருங்கல் அரசு மருத்துவமனையில் பழுதடைந்துள்ள மருத்துவ கட்டிடம் போன்றவை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கருங்கல் தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ்ரூ.5.22 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கருங்கல் பேருந்து நிலைய கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து பணிகளையும்வரும்ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முடிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

என கூறினார். நடைபெற்ற ஆய்வில் உதவி இயக்குநர் பேரூராட்சிகள் கோமதி, களியக்காவிளை பேரூராட்சி செயல் அலுவலர் சந்திரகலா, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு




தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (28.07.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்தஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிட வளாகத்தில் உள்ள தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகியவற்றை பார்வையிட்டு கட்டுமானப் பணிகளின் தன்மைக் குறித்து கேட்டறிந்தது டன், பணிகளை திட்டமிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

பின்னர், ஆண்டிபட்டி வைகை அணைக்கட்டு பகுதிக்கு சென்று, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் மீன்குஞ்சு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருவதை பார்வையிட்டு, பராமரிப்புகள் குறித்துக் கேட்டறிந்தார்.

மேலும், அப்பகுதியில் அலங்காரமீன் வளர்ப்பு மையம் செயல்பட்டு வருவதை பார்வையிட்டு விற்பனை விவரம் குறித்து கேட்டறிந்ததுடன், மீன்வளத்துறையின் மூலம் நகர்ப்பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடமாடும் மீன் உணவகத்தை செயல்படுத்தி, பொதுமக்கள் விரும்பும் வகையில் சுவையான மீன் உணவுகளை வழங்கிட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். இவ்வாய்வில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. முத்துசித்ரா, மீனவளத்துறை உதவி இயக்குநர் சௌந்திரபாண்டியன், பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) உதவிப்பொறியாளர் விக்னேஷ் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.





# முதுகுளத்தூர் அருள்மிகு ஸ்ரீ வடக்கு வாசல் செல்வி அம்மன் 50வது பூச்சொரிதல் விழா

முதுகுளத்தூர் ஜூலை 30

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஸ்ரீ வடக்கு வாசல் செல்வியம்மன் கோவில் 50 ஆம் ஆண்டு பூச்சொரிதல்விழாவில் பால்குடம் தீச்சாட்டி

அழகுக்குத்தி பக்தர்கள் தீ மிதித்து நோத்தி கடனை நிறைவு செய்தனர்

அதனை முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீ வடக்கு வாசல் செல்வி அம்மன் கோவிலில் காலை 9 மணி அளவில் வடக்கு வாசல் செல்வி அம்மனுக்கு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெற்று தொடர்ந்து காலை 10 மணி அளவில் மாபெரும் பொது அன்னதானமும் நடைபெற்று பொது மக்களுக்கு வழங்கப்பட்டது

### எம்.ஜி.எம் ஹெல்த்கேர் மருத்துவமனையில்

# 14 வயது சிறுமிக்கு 'மிட்ரல் வால்வு' மாற்று அறுவை சிகிச்சை




சென்னை, ஜூலை 28: தீவிரமானமிட்ரல்வால்வு நோயின் பாதிப்பால் மூச்சுத் திணறலோடு, பெரும்பாலும்படுக்கையிலேயே முடக்கப்பட்டிருந்த ஒரு 14 வயது சிறுமிக்கு, உடலமைப்புமற்றும்அறுவை சிகிச்சை தொடர்பானபல்வேறு சவால்களை முறியடித்து,எம்.ஜி.எம்ஹெல்த்கேர் மருத்துவர்கள் மிகவும் சிக்கலான மற்றும்அரிய'மிட்ரல்வால்வு' மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்துள்ளனர்.


இடது இதயக்கீழறை வெளியேறல் பாதையில் (LVOT) அடைப்புடன் கூடிய தீவிர 'ஈரிதழ் பின்னொழுக்கு' பிரச்சனை இந்தச் சிறுமிக்கு இருந்தது. சேதமடைந்த மிட்ரல் வால்வு காரணமாக, உடலின் மற்ற பகுதிகளுக்கு ரத்தம் சீராகச் செல்வதற்குப் பதிலாக, இடது ஏட்ரியத்திற்கு ரத்தம் பின்னோக்கிக் கசிந்தது. இதனால் இதயத்திற்கு அதிக அழுத்தம் ஏற்பட்டு கடுமையான மூச்சுத்திணறலை இச்சிறுமி எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதயத்திலிருந்து ரத்தம் வெளியேறும் பாதை குறுகலாக இருந்ததால் நிலைமை இன்னும் சிக்கலாகி, இதயம் ரத்தத்தை பம்ப் செய்வதை கடினமானசெயல்பாடாக மாற்றியிருந்தது.

இந்த அறுவை சிகிச்சையின்மூலம், சேதமடைந்த மிட்ரல் வால்வு மாற்றப்பட்டு, ரத்தக்குழாய் அடைப்பு நீக்கப்பட்டது. இதன் விளைவாக இதயம் வழியாகச் சீரான ரத்தம் ஓட்டம் மீண்டும் சாத்தியமானது. இந்தச் சிறுமிக்கு இருந்த இரண்டு அரிய வகை நோய்களினால் இந்த அறுவை சிகிச்சையை மேற்கொள்ளப் பல மருத்துவமனைகள் மறுத்துவிட்டன. ஏனெனில், அச்சிறுமிக்கு இடதுபுறத்திற்குப் பதிலாக மார்பின் மையப்பகுதியில் இதயம் அமைந்திருந்த 'மீசோகார்டியா' எனப்படும் ஒரு பிறவி குறைபாடும் இருந்தது. இந்த அசாதாரண உடல் அமைப்பியல் காரணமாக மிட்ரல் (இதய ஈரிதழ்) வால்வை அணுகி அறுவைசிகிச்சை செய்வது மிகவும் கடினமானதாக இருந்தது.

மேலும், அச்சிறுமிக்கு 'மோர்கியோ சிண்ட்ரோம்' என்ற அரிய பரம்பரை வளர்சிதை மாற்றக் கோளாறும் இருந்தது. இதனால் உடலில் சில சிக்கலான சர்க்கரை மூலக்கூறுகள் குவிந்து, கழுத்து முதுகெலும்பின் மேல் பகுதியில் உறுதியற்ற தன்மை உட்படப் பலஎலும்புகுறைபாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதிப்பு கூடுதல் சிக்கலை ஏற்படுத்தியிருந்தது. அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நேரம் முழுவதும் அச்சிறுமியின் கழுத்துப் பகுதியை நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் சிறப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்ததால், மயக்க மருந்து வழங்கும்போதும் மற்றும் அறுவை சிகிச்சையின்போதும் மருத்துவக் குழுவினருக்கு இது கூடுதல் சவாலாக அமைந்தது.

குழந்தைகளுக்கான மார்பறை, இதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர்.கே.ஆர். நவீன் டேவிட்சன், இந்தச் சிறுமிக்குத் திறந்தநிலை இதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட மருத்துவக் குழுவிற்கு தலைமை வகித்தார்.

# ஈரோடு மாநகராட்சி மன்றக் கூட்டம்



ஈரோடு, ஜூலை 30: ஈரோடு மாநகராட்சியின் மன்றக் கூட்டம் மேயர் நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் துணை மேயர் செல்வராஜ், மாநகராட்சி ஆணையாளர் அரபித் ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் (கவுன்சிலர்கள்) மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டு பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் நிர்வாகம் தொடர்பான தீர்மானங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.






கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை சார்பாக, நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 82 இலட்சத்து 72 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 12 புதிய வகுப்பறைகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் .ச.கீர்த்தனா அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார் முன்னிலையில் குத்துவிளக்கு ஏற்றி, திறந்து வைத்தார். உடன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் .பா.முகுந்தன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .மதன் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# பட்ஜெட் கூட்டத் தொடர் அல்லது சுதந்திர தின உரையில் எட்டாவது ஊதிய குழு தொடர்பான அறிக்கை வெளியிட முதலமைச்சருக்கு கோரிக்கை

தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொதுச் சங்கங்களில் முதன்மையான சங்கமாக விளங்கும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மற்றும் அதில் இணைந்துள்ள இணைப்புச் சங்கங்கள், சார்பு கூட்டமைப்புகள் மற்றும் தோழமைச் சங்கங்கள் சார்பாக கீழ்க் கண்ட கோரிக்கையை 28.7.2026 தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவரும் அனைத்து துறை சங்கங்களையும் கூட்டமைப்பின் முதன்மை ஒருங்கிணைப்பாளருமான மகேந்திர குமார் முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது ஆளுகின்ற தமிழக வெற்றிக்கழக அரசின் முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே 2% அகவிலைப்படி உயர்த்தியது, தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின் இடைக்கால நிவாரணமாக விதிமுறைகள் வகுத்தது, சத்துணவு அங்கன்வாடி பணியாளர்களுக்கு நிலுவையில் இருந்த ஓய்வூதிய அரசாணைகளை பிறப்பித்தது, டாஸ்மார்க் பணியாளர்களுக்கு 25% ஊதிய உயர்வு அளித்தது அனைத்து துறைகளிலும் சீரமைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்திற்கும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

# இந்திய குடியரசு கட்சி வடசென்னை மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம்




சென்னை, ஜூலை 30, இந்திய குடியரசு கட்சி வடசென்னை மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் எழும்பூர் இக்ஷா மையத்தில் நடைபெற்றது.

மாநிலத்துணைத்தலைவர்கள் ரமேஷ்குமார் தலைமையிலும், மாநில செயற்குழு உறுப்பினர் தினேஷ்குமார் முன்னிலையும் நடைபெற்ற இந்நிகழ்ச்சியல் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து அறிமுகம் செய்து வைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் மாநிலம் பொருளாளர்கள் மங்காப்பிள்ளை, சி.எஸ் .கௌரிசங்கர், கொள்கை பரப்புச் செயலாளர் தன்ராஜ், மாநில அமைப்புச் செயலாளர் எம்.மோகன் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள்,

பிற அணியினர் கலந்து கொண்டனர்.

# பேரிடர் மேலாண்மை குறித்த ஏழு நாள் சிறப்புப் பயிற்சி முகாம்




தென்தாமரைகுளம்., ஜூலை., 30 .பேரிடர் மேலாண்மை ஏழு நாள் சிறப்புப் பயிற்சி முகாம் "யுவ ஆப்தாமித்ரா" திட்டத்தின் கீழ் ஜாய் பல்கலைக்கழகத்தில் (வடக்கன் குளம்) சிறப்பாக நடந்து முடிந்தது. இப்பயிற்சி முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், தேசிய மாணவர்படை மாணவர்கள் மற்றும் எனது பாரதம் மாணவர்கள் என மொத்தம் 600 மாணவர்கள் கலந்து கொண்டுப் பயிற்சிப் பெற்றார்கள். இப்பயிற்சி முகாமில் மாணவர்களுக்கு பேரிடர் தயார் நிலை, அவசரகால உதவி, மீட்புப் பணிகள், முதலுதவி மற்றும் சமூக சேவைக் குறித்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், ஜாய் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பல்கலைக் கழக சார்பு துணைவேந்தர், பல்கலைக் கழகப் பதிவாளர், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படைப் பணிப் பயிற்றுநர்கள், தீயணைப்பு மீட்புப் படைப் பணிப் பயிற்றுநர்கள், சுகாதாரத்துறைப் பணிப் பயிற்றுநர்கள், எனது பாரதம், மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, பணகுடி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் இரா. திலகா மற்றும் பேரிடர் மீட்புப் பணி ஒருங்கிணைப்பாளர் அ. சபேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்கள்.

# சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாள்: ஈரோடு மாவட்டத்தில் 3 ந் அன்று உள்ளூர் விடுமுறை




ஈரோடு ஜூலை 28 ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்.கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது சுதந்திர போராட்ட வீரர் தீரன்சின்னமலலநினைவு நாளை யொட்டி வருகிற 3 ந் தேதி அன்று ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்விநிறுவனங்களுக்கும் உள்ளூர்விடுமுறைஅளிக்கப்படுகிறது. கல்லூரி பள்ளிகளில் தேர்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தால், இந்த விடுமுறை அறிவிப்பு பொருந்தாது எனவும், தேர்வுகள் முன்கூட்டி அறிவித்தபடி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடுமுறையை ஈடு செய்யும் பொருட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்விநிறுவனங்களுக்கும் வருகிற 28 ந் தேதி சனிக்கிழமை அன்று பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

வங்கிகளுக்கு இவ்விடுமுறை பொருந்தாது. உள்ளூர் விடுமுறை நாளான 3 ந் தேதி அன்று அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு ஈரோடு மாவட்டத்திலுள்ள கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# காவிரி ஆற்றில் செத்து மிதக்கும் மீன்கள்; நோய் தொற்று பரவும் அபாயம்!



தமிழகத்தில்எல்.நினோ பாதிப்பால் பருவ மழை பொய்த்து போய் நீர் நிலைகள் வறண்டு காணப்படுகின்றன. அதீத வெப்பத்தால் காவிரி கல்லணை கால்வாய் என பல்வேறு ஆறுகளிலும் பள்ளங்களில் தேங்கிய நீரும் வற்றி வருகிறது.

மேலும், வழக்கமாக ஜூன் மாதம் திறக்கக்கூடிய மேட்டூர் அணை திறக்கப்படாததால் காவிரி ஆற்றில் நீர் வரத்து மிகவும் குறைந்து காணப்படுகிறது.

குடிநீர் தேவைக்காக மட்டுமே அவ்வப்போது நீர் திறக்கப்பட்டு வருகிறது. அந்த நீர் காவிரி மணல் பரப்பில் ஆங்காங்கே குளம்போல் தேங்கி நிற்கின்றது. வரும் ஆடி பதினெட்டு மற்றும் ஆடி அமாவாசை தினங்களில் பொதுமக்கள் இந்த நீரோடைகளை பயன்படுத்த திட்டமிட்டிருந்த நிலையில், ஸ்ரீரங்கம் அம்மா மண்டப காவிரி ஆற்றில் ஆங்காங்கே குளம் போல் தேங்கிய நீரில் பல்லாயிரக்கணக்கான மீன்கள் செத்து மிதக்கின்றன. இந்த காட்சிகள் சமூக வலை தளங்களில் பரவி பொது மக்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்து மாநகராட்சி மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து நீரின் தன்மையை ஆய்வுசெய்ய வேண்டும் என்றும், செத்து மிதக்கும் மீன்களை அகற்றி நோய் தொற்று பரவும் முன் படித்துறையைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காவிரி ஆற்றில் அதீத வெப்பம் காரணமாக மீன்கள் செத்ததா? அல்லது சமூக விரோத கும்பல் மீன் பிடிப்பதில் ஏற்பட்ட போட்டிகள் காரணமாகஏதும் நச்சுத்தன்மையை நீரில் கலந்தனரா என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இன்னும் சில தினங்களில் ஆடி அமாவாசை ஆடி 18 வரவிருக்கும் நிலையில் இருக்கும் நீரை சுகாதாரத் தன்மையுடன் பொதுமக்கள் பயன்படுத்த முடியுமா என்ற கேள்வி, அச்சம் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிக்கையாளர்கள் சங்கம் சார்பில்

# சோளிங்கரில் செய்தியாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து கண்டன ஆர்பாட்டம்

தருமபுரி ஜூலை 30 தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் சார்பில் சோளிங்கரில் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து தருமபுரி பழைய ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர்சுரேஷ்தலைமை வகித்தார். சோளிங்கரில் செய்தி சேகரிக்கச் சென்ற தினகரன் நாளிதழ் செய்தியாளர் அரங்கநாதன் மற்றும் தினமலர் நாளிதழ் செய்தியாளர் கல்யாணசுந்தரம் ஆகியோர் மீது த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் கபில், அவரது தம்பி மற்றும் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த தாக்குதலில் காயமடைந்த இரு செய்தியாளர்களும் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்த செய்தியாளர்கள், தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படும் அனைவரையும் காவல்துறையினர் உடனடியாக கைது செய்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.

மேலும், தமிழக அரசு பத்திரிகையாளர் பாதுகாப்பு சட்டத்தை விரைவில் அமல்படுத்த வேண்டும் என்றும், செய்தியாளர்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க மாவட்ட செயலாளர் ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் புகழேந்தி, மாவட்ட செய்தித்தொடர்பாளர்ராமதாஸ், மாவட்ட துணைச் செயலாளர் நந்தகுமார், முன்னாள் மாவட்ட செயலாளர் மணிகண்டன், மாவட்ட இணைச் செயலாளர் குருபிரசாத் உள்ளிட்ட நிர்வாகிகளும், ஏராளமான செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.





# விஜய்யின் நல்லாட்சிக்கு அகில இந்திய தமிழர் கழகம் ஆதரவு

நாகர்கோவில்: ஜுலை 30

மக்களாட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர் விஜய்யின் நல்லாட்சியை பாராட்டும் விதத்தில் அகில இந்திய தமிழர்கழகத்தினர், நிறுவனர் முத்துக்குமார் தலைமையில் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இதற்கான ஆதரவு கடிதத்தை தமிழக வெற்றிக் கழகத்தின் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். மாதவனிடம் சால்வை அணிவித்து வழங்கினார்கள்.

முன்னதாக அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமாருக்கு, மாவட்ட செயலாளர் மாதவன் சால்வை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் அகில இந்திய தமிழர் கழகத்தின் நிர்வாகிகளான ராதாகிருஷ்ணன், குழந்தைசாமி, நாகேஸ்வரன், சஜு, மற்றும் சசி, சரவணன், விக்ரமன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# தருமபுரியில் இந்தியன் வங்கி ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டிடம் திறப்பு

தருமபுரி ஜுலை 30

தருமபுரி மாவட்டத்தில் இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் (RSETI) புதிய கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. தருமபுரி மாவட்டம் செட்டிக்கரை ஊராட்சி பகுதியில் உள்ள நீலபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதியகட்டிடத்தின்திறப்பு விழாவில் பல்வேறு அரசு அதிகாரிகள்மற்றும்வங்கி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் தொடக்கமாக, இந்தியன் வங்கி ஊரகசுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பினோத் குமார், நாமக்கல்லில் இருந்து காணொளிக் காட்சி வாயிலாக புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து தருமபுரியில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா ரிப்பன் வெட்டி புதிய கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பின்னர் குத்து




விளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்த அவர், புதிய கட்டிடம் மூலம் மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள்மேலும்விரிவுபெற்று, இளைஞர்கள், மகளிர் மற்றும் தொழில் முனைவோர் அதிக அளவில் பயன்பெறுவார்கள் என வாழ்த்துத் தெரிவித்தார். இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலம் பல்வேறு தொழில் சார்ந்த இலவச பயிற்சிகள் வழங்கப்பட்டு, பயிற்சி பெற்றவர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதல் மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கான ஆலோசனைகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. புதிய கட்டிடம் திறக்கப்பட்டதன் மூலம் பயிற்சி நடவடிக்கைகள் மேலும் சிறப்பாக நடைபெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி பெறும் அனைவரும் நிறுவனத்திலே தங்கி பயிற்சி மேற்கொள்ள விடுதிகளும், உணவு வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் இந்தியன் வங்கியின் அதிகாரிகள், பயிற்சி நிறுவனத்தின் ஊழியர்கள், பயிற்சியாளர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# குமரியில் ரவுடி கொலை: இளம் பெண் கைது மேலும் 5 பேருக்கு போலீஸ் வலை

நாகர்கோவில் ஜுலை 30

அஞ்சுகிராமம் அருகே உள்ள மயிலாடி காமராஜர் நகர் பகுதியை சேர்ந்தவர் மதுரைவீரன்(35). செப்டிக் டேங்க் கிளீனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் சுசீந்திரம் அருகே உள்ள நல்லூரை அடுத்த மறுகால் தலை பகுதியில் உடலில் வெட்டு காயங்களுடன் மதுரை வீரன் பிணமாக கிடந்தார். அவரை யாரோ மர்மநபர்கள் சராமாரியாக வெட்டி படுகொலை செய்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் சுசீந்திரம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். பின்பு மதுரை வீரனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தக் கொலை தொடர்பாக தனிப்படை அமைக்கப்பட்டது.விசாரணையில் சுசீந்திரம் அருகே உள்ள நல்லூரை அடுத்த மறுகால் தலை பகுதியை சேர்ந்த மாரியப்பன் தம்பி செல்லையா என்பவரின் கொலைக்கு பழிக்குப் பழி வாங்கும் வகையில் அவரது குடும்பத்தினர் மதுரை வீரனை கொலை செய்தது தெரியவந்தது. மதுரைவீரன் குடும்பத்தாருக்கும் மாரியப்பன்குடும்பத்தாருக்கும் செப்டி டேங்க் வண்டி ஓட்டுவதில் பிரச்சினை ஏற்பட்டு மாரியப்பனின் தம்பி செல்லையாவை 2021ம் ஆண்டு குளச்சல் போலீஸ் நிலையை எல்கைக்கு உட்பட்ட பகுதியில் வைத்து மதுரை வீரன் கும்பல் கொலை செய்தது. அந்த வழக்கு தற்போது தக்கலை பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினமும் மதுரை வீரன் பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வரும்போது மாரியப்பன், மதுரைவீரனை சமரசம் பேச அழைத்துள்ளதாக கூறப்படுகிறது. அதன்பேரில் மதுரை வீரன் சென்று இருக்கிறார்.

அப்போது மாரியப்பனின் குடும்பத்தினர் மதுரை வீரன் உடன் தகராறு செய்தது மட்டுமின்றி அவர்கள் வைத்திருந்த அரிவாளால் சாரமாரியாக மதுரை வீரனை வெட்டினர். இதில் பலத்த காயமடைந்த மதுரை வீரன் சம்பவ இடத்திலேயே பலியானார். கோர்ட்டுக்கு சென்று வந்த மதுரை வீரனை மாரியப்பன் உள்ளிட்டோர் திட்டமிட்டு வரவழைத்து சராமாரியாக வெட்டி கொலை செய்துள்ளனர்.

மேற்கண்ட தகவல்கள் போலீசாரின் தீவிர விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து மாரியப்பன் அவரது தாய் நாச்சியார், மாரியப்பனின் மனைவிகள் முத்துலெட்சுமி, சரண்யா, மாரியப்பனின் தங்கை ஐஸ்வர்யா உள்ளிட்ட 6 பேர் மீது சுசீந்திரம் போலீசார் கொலை வழக்கு பதிந்தனர். கொலை செய்யப்பட்ட மதுரைவீரன் மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் இருக்கின்றது. இதனால் அவரது பெயர் அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் ரவுடிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. அதேபோல் கொலையில்தலைமறைவாக உள்ள மாரியப்பன் மீதும் பல வழக்குகள் உள்ளது. அவரது பெயர் சுசீந்திரம் காவல் நிலையத்தில் ரவுடிகள் பட்டியலில் இடம் பெற்று இருக்கிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்த கொலை வழக்கு தொடர்பாக மாரியப்பனின் குடும்ப உறவுக்கார 17 வயது பெண்ணை போலீசார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரிடம் நடத்தி விசாரணையில் சமாதானம் பேச வந்த இடத்தில் மதுரை வீரன் அவதூறாக பேசியதால் கொலை செய்யப்பட்டதாக கூறியுள்ளார். அவரை கைது செய்து நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சீர்திருத்த பள்ளியில் அடைத்தனர். மேலும் மற்ற 5 பேரையும் போலீசார் தேடி வருகிறார்கள்.

# கல்வி கட்டணம் செலுத்த உதவி செய்த பட்டதாரி ஆசிரியர் கழகம்



சேலம் ஜுலை 30

சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவன் தரணிஷ் என்பவருக்கு திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் கட்டிட பொறியியல் இளங்கலை பட்டம் பயில்வதற்கு ஆண்டிற்கு ரூ. 56,000 வீதம் நான்காண்டுகளுக்கு முழு கல்வி கட்டணத்தை ஏற்பதற்கு உரிய ஆணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் முன்னிலையில் தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தினர் வழங்கினார்.

சேலம் மாவட்டத்தில் "கல்லூரி கனவு பெரிதினும் பெரிது கேள்" உயர் கல்வி சேர்க்கைக்கான கட்டுப்பாட்டு அறை மூலம் மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்த விழிப்புணர்வு வழிகாட்டல், ஆலோசனை மற்றும் கல்லூரி சேர்க்கை தொடர்பான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழ்நாடு உயர்நிலைப் மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் தரணிஷ் என்கிற மாணவருக்கு கல்வி கட்டண உதவி வழங்கப்பட்டது.

# பத்திரிகையாளரை தாக்கிய சமூக விரோதி மீது நடவடிக்கை எடுக்க சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச்செயலாளர் சந்திரமோகன் எஸ்.பிக்கு கோரிக்கை மனு

கிருஷ்ணகிரி, ஜுலை 30

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பெரியா கவுண்டனூர் பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் மற்றும் அவருடைய குடும்பத்தாரை தாக்கியும் மிரட்டல் விடுவித்தும் வருகின்ற சமூக விரோதி மீது அசம்பாவிதங்கள் நடைபெறும் முன் நடவடிக்கை எடுக்க கோரி சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச்செயலாளர் சந்திர மோகன் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கோரிக்கை மனு அளித்தார்.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது : கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், காரப்பட்டு அருகே உள்ள பெரியாகவுண்டனூர் பகுதியைச் சேர்ந்த பூபாலன் என்பவர் கஞ்சா போதையில் அடிக்கடி அப்பகுதியில் அராஜகச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அதே பகுதியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் முரு



கேசன் (42) என்பவர் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். சம்பவத்தன்று வீட்டில் அவர் இல்லாத நேரத்தில், பூபாலன் மற்றும் அவரது தந்தை வெங்கடேசன் ஆகியோர் வீட்டிற்குள் சென்று முருகேசனின் மனைவியை மிரட்டி தாக்கியதாக கூறப்படுகிறது. தகவலறிந்து வீட்டிற்கு வந்த முருகேசனையும் அவர்கள் தாக்கியதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூபாலன் மீது ஏற்கனவே பாரூர் காவல் நிலையத்தில் பல்வேறு வழக்குகள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த 10.07.2026 அன்று முருகேசன் மற்றும் அவரது மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்ததுடன், ஆபாசமாக பேசி தாக்குதல் நடத்தியதாக ஊத்தங்கரை காவல் நிலையத்தில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நபர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் ஆய்வாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களை தாக்குதல், ஆபாசமாக பேசுதல், நில அபகரிப்பு, டீசல் திருட்டு, கட்டப்பஞ்சாயத்து உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாககூறப்படும் பூபாலன் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

மேலும் பத்திரிக்கையாளரை தாக்கிய நபரை உடனடியாக கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பத்திரிக்கையாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, கோச்சடை பகுதியில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் நடுவதன் அவசியம் குறித்தும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மரக் கன்றுகள் நடவு செய்திடும் வகையில் ஆணையாளர் கௌரவ் குமார் இ.ஆ.ப., மரக்கன்றுகளை நடவு செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

# பட்டப்பகலில் கத்தி முனையில் கொள்ளை

திருவள்ளூரில் பட்டப் பகலில் பிரபல சூப்பர் மார்க்கெட்டில் கத்தியை காட்டிமிரட்டிகொள்ளை கடைக்குள் இருந்த பொதுமக்கள் அலறி அடித்து ஓட்டம்

திருவள்ளூர் வடக்கு ராஜா வீதியில் அமைந்துள்ள பிரபல சூப்பர் மார்க்கெட்டில் இளைஞர் ஒருவர் பொருட்களை வாங்கிக்கொண்டு அதனை பில்லிங் செய்யும் இடத்திற்கு கொண்டு வந்துள்ளார் அப்போது அவர் மறைத்து வைத்துள்ள சுமார் இரண்டடி நீளமுள்ள கத்தி எடுத்து டேபிளில் வைத்துள்ளார் அதனை பார்த்த பில்டிங் இடத்தில் இருந்த பணிப் பெண் மற்றும் பொதுமக்கள் அலரி அதித்துக் கொண்டு ஓடி உள்ளனர்

அதன் பின்பு அவர் அங்கிருந்து பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு தப்பி சென்றதாக தெரிகிறது இதனை திருவள்ளூர் நகர காவல் நிலையத்துக்கு தகவலைத்ததின் பெயரில் காவலர்கள் விரைந்து கொள்ளையடித்த நபரை பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்ற பட்ட பகலில் இத்தகைய கொள்ளைசம்பவம் நடந்ததை திருவள்ளூர் நகர் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது



## நாகர்கோவிலில்

# டெட் தேர்வை ரத்து செய்ய கோரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




நாகர்கோவில், ஜுலை. 30

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கு டெட் தேர்வை ரத்து செய்திட வேண்டும். கல்வியும் மருத்துவமும் மத்திய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு மாற்ற வேண்டும். 2010க்கு முன்பு பணியாற்றிய ஆசிரியர்களுக்கு டெட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். தற்பொழுது நடைபெற்ற டெட் தேர்வில் வெயிட்டேஜ் மதிப்பெண்கள் வழங்கிட வேண்டும். நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர் பதவி உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் சார்பில் நாகர்கோவில் வேப்பமூடு பூங்கா முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்திற்கு அகஸ்தீஸ்வரம் வட்டார தலைவர் கண்ணன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் பாக்கியமணி முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ராபர்ட் பாபு, வட்டார செயலாளர் சாந்தகுமார், நாகர்கோவில் மாநகர தலைவர் கண்ணன், மாவட்ட துணை தலைவர் முருகராஜ், மாவட்ட இணை செயலாளர் மோகனச்சந்திரன் ஆகியோர் பேசினர். சிறப்பு விருந்தினராக மாநில பொருளாளர் தியாகராஜன் கலந்து கொண்டு போராட்டம் குறித்து பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் ஜான் உபால்ட், , முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழக தனியார் பள்ளி மாநில செயலாளர் பிரேம் தாஸ், முருகானந்தம், வட்டார மகளிர் அணி செயலாளர் நளினி உட்பட பலர் கலந்து கொண்டனர். தோவாளை வட்டார செயலாளர் ஐயப்பன் நன்றி கூறினார்.

# ஆதார் சேவைக்கு அதிக கட்டணம் வசூல் செய்ததால் ஆதார் சேவை மையம் முடக்கம் ஆட்சியர் நடவடிக்கை

தருமபுரி ஜுலை 30

தருமபுரி மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் அறிவுறுத்துதலின்படி, இந்தியன் வங்கி பிரதான கிளையில் செயல்பட்டுவரும் ஆதார் சேவை மையத்தில் மாவட்ட தமிழ்நாடு அரசு கேபிள் டிவி தனி வட்டாட்சியரால் 24.07.2026 அன்று ஆய்வு மேற்கொண்டதில் இலவசமாக புதிய ஆதார் பதிவு செய்வதற்கு பதிலாக ரூ.150 பெறுவதும், ஆதாரில் மாற்றம் /திருத்தம் செய்ய ரூ.75 க்கு பதிலாக ரூ.100 கூடுதாலகவும், கைரேகை, கருவிழி பதிவு செய்ய ரூ.125 க்கு பதிலாக ரூ.250 கூடுதலாக பெறுவதும் கண்டறியப்பட்டது.



இது UIDAI நிர்ணயம் செய்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் பெற்றதால் அந்த ஆதார் சேவை மைய தரவு உள்ளிட்டாளரின் ஆதார் ஐ.டி 24.07.2026 அன்று முடக்கம் செய்யப்பட்டு, இந்தியன் வங்கி பிரதான கிளை ஆதார் சேவை மையம் முடக்கம் செய்யப்பட்டுள்ளது என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு, ஆந்திராவில் பரவும் ஓமிக்ரான் கொரோனா

சென்னை: கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பரவ ஆரம்பித்த கொரோனாசர்வதேசஅளவில்எந்தளவுக்குமோசமானபாதிப்பை ஏற்படுத்தியது என்பது அனைவருக்கும் நினைவு இருக்கும். வேக்சின், தீவிர தடுப்பு நடவடிக்கைக்கு பிறகே கொரோனா பாதிப்பு கட்டுக்குள் வந்தது. இதற்கிடையே இப்போது தமிழகத்தில் மீண்டும் கொரோனா பரவ ஆரம்பித்துள்ளது பொதுமக்களிடையே அச்சத்தைஏற்படுத்தியுள்ளது.2019ல்பரவஆரம்பித்தகொரோனா சர்வதேச அளவில் எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பது அனைவருக்கும் நினைவில் இருக்கும். கடந்த சில ஆண்டுகளாக கொரோனா பரவல் காரணமாக பெரியளவில் எந்தவொரு பாதிப்பும் இல்லை. இதற்கிடையே நடப்பாண்டில் இதுவரை பதிவான கொரோனா பாதிப்புகள் குறித்த விவரம் இப்போது வெளியாகியுள்ளது. இது குறித்து மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் ஏ. சோமசுந்தரம் கூறுகையில், "புனேயில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்திற்கு 20 மாதிரிகளை அனுப்பினோம். அவை அனைத்துமே ஓமிக்ரான் RF.5 துணை வேரியண்ட் என்பது உறுதியாகியுள்ளது.

# ஜிவா ஒரு மாத கால சிறப்பு சலுகைகள் திட்டத்தை தொடங்குகிறது

சென்னை, ஜுலை 30,

தமிழ்நாட்டில் மிகவும் விசேஷமான ஆடி மாதம் பிறந்துள்ளதை முன்னிட்டு, ஜிவா (GIVA ) நிறுவனம் சென்னை ஆபரண விற்பனையகங்களில் ஒரு மாத காலத்திற்கு ஆடி பண்டிகைக் கால ஷாப்பிங், நவீன ஆபரண கலெக்ஷன்கள் மற்றும் சிறப்புப் பருவகாலச் சலுகைகளை ஆகஸ்ட் 17ம் தேதி வரை தொடர்கின்றன. ஆடிப் பெருக்கு (ஆகஸ்ட் 13) திருவிழா நாட்கள், ஷாப்பிங் செய்வதற்கான உச்சக் கட்ட வார இறுதி நாட்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சிறப்பு கொண்டாட்ட நிகழ்வு குறித்து ஜிவா ன் தலைமை வருவாய் அதிகாரி அனிருத் குத்வா பேசுகையில், 'தமிழ்நாடு ஜிவாவிற்கு




ஒரு முக்கியமான சந்தையாகும்.மேலும் ஆடி மாதம் என்பது இங்கு அனைவராலும் மிகவும் எதிர்பார்க்கப்படும் ஷாப்பிங் பருவங்களில் ஒன்றாகும். சிறப்பு சலுகைகளை வழங்கும் இந்த நிகழ்வின் மூலம், தமிழக மக்களின் பாரம்பரியத்தை நாங்களும் இணைந்து கொண்டாடுகிறோம். சென்னை முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் எங்கள் நவீன, ஆபரண கலெக்ஷன்களை சிறப்பு சலுகைகளுடன் எளிதாக வாங்கி மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்." என்றார்.

ஆடி சிறப்பு சலுகைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, விற்பனை காலத்தில் வெள்ளிநகைகளுக்கு இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் சலுகையை நுகர்வோர்கள் பெற்று மகிழலாம் என்று தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சி, மூக்காண்டப்பள்ளி, ஹோட்டல் ஹில்ஸ்கன்வர்சன் அரங்கில் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தி வரும் 1 5வது ஒசூர் புத்தகத் திருவிழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் .கீரத்னா , மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் முன்னிலையில், 6 அரசுப் பள்ளி நூலகங்களுக்கு, குளோபல் கால்சியம் நிறுவன சமூக பொறுப்பு நிதி உதவியுடன் தலா ரூ.7 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்களை வழங்கினார். உடன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் .பா.முருகந்தன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .மதன்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட சுகாதார நலச்சங்க ஆய்வுக் கூட்டத்தில் கோவில்பட்டி சுகாதார மாவட்டத்தின் சார்பாக 8 சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களும் 2 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் தேசிய தரச் சான்றிதழ் பெறப்பட்ட தற்கும், HPV தடுப்பூசிகள் சிறப்பாக குறியீட்டை அடைந்ததற்கும், தொடர்ந்து இரண்டு நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இரண்டு கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் சிறப்பாக செயல்பட்டதற்கான மாநில அளவில் தரவரிசை பட்டியலில் முன்னிலை அடைந்ததற்கு மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன், பாராட்டி, பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார்.

# ஆயிரக்கணக்கான மக்களோடு உண்ணாவிரதம் இருப்போம்!! கோழிப்பண்ணை ஊர் போராட்ட குழுவினர்



திருப்பூர்
ஜூலை 30

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4,மங்கலம் சாலை வார்டு எண் 38=39 ஆகிய இரண்டு வார்டுகளின் எல்லை பகுதியான கோழி பண்ணை பேருந்து நிலையம் மங்கலத்தில் இருந்து திருப்பூர் வரும் தொழிலாளர்கள் மற்றும் அருகிலுள்ள தனியார் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கு பிரதான சாலையான திருப்பூர் மங்கலம் சாலை கோழி பண்ணை பஸ் ஸ்டாப் அடுத்து இந்த சாலையில் சுமார் 400 மீட்டர் அளவிற்கு குப்பைகள் சாலையில் கொட்டப்பட்டு இரண்டு மாதங்களாக துர்நாற்றம் வீசி வந்த நிலையில் அனைத்து கட்சி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் ஒன்றிணைந்து இன்று 29 ஆம் தேதி மாபெரும் உண்ணாவிரத போராட்டம் அறிவித்தனர் நேற்று இரவோடுஇரவாகபாதிக்கும் மேற்பட்ட குப்பைகளை அள்ளிய அதிகாரிகள் போராட்டக் குழுவினரிடம் இரண்டு நாட்கள் கால அவகாசம் கேட்ட நிலையில் காலையில் ஆதரவு தெரிவிக்க வந்த பொது மக்களிடம் இரண்டு நாட்கள் அவகாசம் கொடுத்துவிட்டு பின்பு குப்பை எடுக்க விட்டாலும் அல்லது மீண்டும் குப்பை வந்து கொட்டினாலும் உண்ணாவிரத போராட்டம் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் நடைபெற இருப்பதாக போராட்ட குழுவினர் தெரிவித்தனர்...

# கப்பலில் சிக்கி தவிக்கும் 13 இந்தியர்கள்.. மாலுமிகள் பீதி



கீவ்: ஜூலை 29

ஒரு பக்கம் வளைகுடாவில் நிலைமை மோசமாகி வரும் நிலையில், இன்னொரு பக்கம் உக்ரைன் ரஷ்யா மோதலும் இப்போது முடிவுக்கு வருவது போல தெரியவில்லை. இதற்கிடையே அங்கு தீவிரமடைந்துள்ள தாக்குதல் காரணமாக 13 இந்தியர்கள் உட்பட 15 மாலுமிகள் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களுக்கு மத்தியில் தவித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகிலேயே அதிக மாலுமிகளை கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கிறது. இந்தியர்கள் உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த கப்பல்களிலும் பணியாற்றி வருகிறார்கள். இப்போது சர்வதேச பதற்றம் காரணமாக டிரோன் தாக்குதல்கள் அதிகரித்திருக்கும் சூழலில், கப்பலில் பணியாற்றும் இந்தியர்கள் உயிருக்கு அச்சுறுத்தல் அடிக்கடி ஏற்படுகிறது. அப்படியொரு சம்பவம் தான் இப்போது நடந்துள்ளது

உக்ரைனின் கருங்கடல் பகுதியில் உள்ள சோர்னோமோர்ஸ்க் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள சரக்கு கப்பலில் சிக்கித் தவிக்கும் 13 இந்தியர்கள் உள்பட 15 மாலுமிகள்

இப்போது அச்சத்தில் இருக்கிறார்கள்.

ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் காரணமாக என்ன ஆகுமோ என்ற அச்சத்திலேயே இவர்கள் ஒவ்வொரு நிமிடத்தையும் கழிக்க வேண்டிய சூழல் உருவாகி இருப்பதாக இந்திய மாலுமிகள் சங்கம் தெரிவித்துள்ளது. மேலும், இவர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன் வைக்கப் பட்டுள்ளது.

சோர்னோமோர்ஸ்க் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள M.V. AMIR1 என்ற சரக்கு கப்பலில் மொத்தம் 15 மாலுமிகள் உள்ளனர். அவர்களில் 13 பேர் இந்தியர்கள் ஆவர். ரஷ்யாஉக்ரைன் இடையேயான போர் இப்போது மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், துறைமுகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது. இதனால் கப்பலில் உள்ளவர்கள் அச்சத்தில் உள்ளதாக மாலுமிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மாலுமிகள் சங்கம் மேலும் கூறுகையில், "M.V. AMIR1 கப்பலில் உள்ள 15 பேர், குறிப்பாக 13 இந்திய மாலுமிகள், உயிருக்கு ஆபத்தான சூழலில் சிக்கியுள்ளனர். கப்பலுக்கு அருகே தொடர்ந்து ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

எந்த நேரத்திலும் தங்கள்கப்பல் மீது நேரடி தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் அவர்கள் வாழ்கின்றனர்.



# சேலம் குகையில் புது பொலிவுடன் அஸ்வின் ஸ்வீட்ஸ் தொடக்கம்

சேலம், ஜூலை 30

அஸ்வின் ஸ்வீட் அண்ட் ஸ்னாக்ஸ் பேக்கரி தமிழகம் முழுவதும் 40க்கும் மேற்பட்ட கிளைகளுடன் தற்போதுசெயல்பட்டுவருகிறது. சேலத்தில்ஐந்துக்கும் மேற்பட்ட கிளைகள் தற்போது இயங்கி வருகின்றன. இதில் குகை அஸ்வின் ஸ்வீட்ஸ் தற்போது புது பொலிவுடன் துவங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அஸ்வின் குழும நிர்வாக இயக்குனர் கணேசன் குடும்பத்துடன் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி விற்பனையை துவக்கி வைத்தார். இன்று முதல் ஆகஸ்ட் 2ம் தேதி வரை இந்த கிளையில் விற்பனையில் 30 சதவீதம் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் நிஷா, சிபி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



## திருப்பத்தூர் மற்றும் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில்

# வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு

திருப்பத்தூர்:ஜூலை:30, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் பெரியஏரியில் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பு வேலி அமைக்கும் பணி, வாணியம்பாடி அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் மாணவர் விடுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம். நிம்மியம்பட்டு ஊராட்சியில் நாற்றங்கால் பண்ணை, தார்சாலைப் அமைக்கும் பணி, வெள்ளக்குட்டை ஊராட்சியில் நாற்றங்கால் பண்ணை என மொத்தம் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 14 ஆயிரம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ரவிகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். முதலாவதாக, நீர்வளத்துறை மூலம் பராமரிக்கப்படும். 116.5 ஹெக்டர் பரப்பளவு மற்றும் 41 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட திருப்பத்தூர் பெரியஏரியில், குப்பை மற்றும் கழிவு பொருட்களை ஏரிக்கரையின் மீது கொட்டப்படுவதை தடுக்கும் வகையில் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பு வேலி அமைக்கும் பணி நடைபெற்றுவருவதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, பணிகள் தரமாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவடையும் வகையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வாணியம்பாடி, ஆலங்காயம் ரோடு வேப்பமர சாலை பகுதியில் அமைந்துள்ள வாணியம்பாடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டு, தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகள், தொழிற்பிரிவுகளில் மாணவர் சேர்க்கை விவரங்களையும் பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்று செல்லும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் குறித்தும் கேட்டறிந்தார். வாணியம்பாடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் செயல்பட்டு வரும் லிப்ட் மற்றும் எஸ்க லெட்டர் மெக்கானிக் பிரிவு (Lift and Escalator Mechanic), (Mechanic Motor Vehicle). குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் (Refrigeration and AirConditioning Technician), (Fashion Design & Technology), தோல் பொருள் உற்பத்தியாளர் பிரிவு (Leather Goods Maker) ஆகிய தொழிற் பயிற்சி பிரிவுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மாணவர்களுக்குப் போதைப் பொருள் விற்பனை: கேரளாவில் ஆசிரியைகள் கைது.!

கேரளா, ஜுலை:30

கோழிக்கோட்டில் பள்ளி வளாகத்தில் மாணவர்களைக் குறி வைத்து ரகசியமாகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 3 பெண் ஆசிரியர்களைக் காவல்துறையினர் கைது செய்தனர்.

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம் வடகரா அருகே பேராம்பிராவில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பணிபுரியும் பெண் ஆசிரியைகள், பள்ளி வளாகம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை செய்வதாகக் காவல்துறையினருக்குத் தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, கோழிக்கோடு மாநகரக் காவல் ஆணையரின் உத்தரவின் பேரில், மாநிலத்தில் போதைப்பொருளுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் 'ஆபரேஷன் துபான்' சிறப்புத் திட்டத்தின் கீழ் பேராம்பிரா காவல்துறையினர் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

காவல்துறையின் விசாரணையில், மருதோம்கரா பகுதியைச் சேர்ந்த கீர்த்தனா என்ற ஆசிரியைக்குச் சர்வதேசப் போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்தது. அவர் இடைத்தரகராகச் செயல்பட்டு, பள்ளி மாணவர்களைக் குறி வைத்துப் போதைப்பொருட்களை விநியோகம் செய்து வந்துள்ளார். இதையடுத்து ஆசிரியை கீர்த்தனாவைக் கைது செய்த காவல்துறையினர், அவரைத் தனிப் படை காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். அவரது வங்கிச் கணக்கு பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, அதே பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரியும் காவியா என்பவருக்கும் இதில் தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களைத் தொடர்ந்து, இக்கடத்தல் நெட்வொர்க்கில் தொடர்புடைய குற்றோத்து பகுதியைச் சேர்ந்த நிஷ்மா (30) என்ற மற்றொரு ஆசிரியையையும் காவல்துறையினர் கைது செய்தனர். இவர் நேரடியாகப் போதைப்பொருளை விநியோகிக்காமல், கூகுள் பே உள்ளிட்ட ஆன்லைன் மூலம் பணத்தைப் பெற்றுக் கொண்டு, போதைப்பொருள் இருக்கும் இடத்தின் கூகுள் மேப் லொகேஷனை அனுப்பி நூதன முறையில் விற்பனை செய்து வந்தது விசாரணையில் தெரியவந்தது. இவ்வழக்கில் இதுவரை மொத்தம் 3 பெண் ஆசிரியைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் மேலும் சில ஆசிரியர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# களியக்காவிளை அருகே தபால் துறை பெண் ஊழியர் மீது தாக்குதல்

## குற்றவாளிக்கு 8 மாத சிறை தண்டனை அபராதம்

திற்பரப்பு மாஞ்சாகோணம் பகுதியைச் சேர்ந்தவர் பகுதியைச் சேர்ந்தவர் விஜயகுமார். இவரது மகள் அபிநயா விஜய் (24). இவர் மெதுகுமல் தபால் நிலையத்தில் தபால்காரராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் கடந்த 20.10.21 அன்று அபிநயா தபால் நிலையத்தில் தனியாக பணியில் இருந்த போது ,மெதுமல் குண்டறவிளையை சேர்ந்த சத்திய நேசன் மகன் செல்வன் என்ற கண்ணன் (43) ,என்பவர் தபால் நிலையம் வந்து போஸ்ட் மாஸ்டரின் போன் நம்பரை கொடுங்கள் என கேட்டுள்ளார். அதற்கு அபிநயாவும் போன் நம்பரை கொடுத்துள்ளார் .பின்னர் சிறிது நேரம் தாண்டி திரும்பி வந்த செல்வன் தவறான நம்பரை கொடுத்து விட்டாயா என ஆபாசமாக கேட்டு கன்னத்தில்சரமாரியாகதாக்கி காயப்படுத்தி உள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அபிநயா அழுது கொண்டே தனது மேல் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளார். இந்நிலையில் அபிநயாவின் அண்ணன் அனிஷ் விஜய் ,அபிநயாவை வீட்டிற்கு அழைத்து செல்ல வந்துள்ளார்.அப்போது அங்கு நின்ற செல்வன் என்ற கண்ணன் ஆபாசமாக பேசி அனிஷ் விஜய்யையும் தாக்கியுள்ளார் .மேலும் அபிநயா இனிமேல் எங்கு வேலைக்கு வந்தால் கொலை செய்துவிடுவதாகவும் மிரட்டி உள்ளார். இதை அடுத்து படுகாயம் அடைந்த இருவரும் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளனர். இந்த வழக்கு குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து இது சம்மந்தமான வழக்கு குழித்துறை நடுவர் நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்று வந்தது. இந்நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதி சகின் குமார் ,குற்றவிவாளி செல்வன் என்ற கண்ணனுக்கு 8 மாத சிறை தண்டனையும் 100 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார். அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே குற்றவாளி செல்வன் ஒரு போஸ்கோ வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து வருவதால் அந்த தண்டனையின் நாள் கணக்குப்படி அனுபவித்துக்கொள்ளலாம் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



சேலம் மாநகராட்சி மைய அலுவலக மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் ஆ. இராமச்சந்திரன் தலைமையில், ஆணையாளர் லலித் ஆதித்ய நீலம் முன்னிலையில் 29ம் தேதி புதன்கிழமை அன்று மாமன்ற இயல்பு கூட்டம் நடைபெற்றது. உடன் மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவட்டார் ஸ்ரீ ஆதிகேசவன் கோவிலில் திருட்டு போன தங்கநகைகளை கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள் சுசிந்திரம் இணை ஆணையரிம் ஒப்படைக்க பத்மநாபபுரம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் உத்தரவு

திருவட்டார் ஆதிகேசவன் கோயில் நகை திருடபட்டது சம்மந்தமாக கோவில் பூஜாரி நாராயணன் நம்பூதிரி என்பவர் கடந்த 18.2.1995ம் வருடம் திருவட்டார் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு திருட்டு போன நகைகளை போலிஸார் கைபற்றி பத்மநாபபுரம் குற்றவியல் நடுவர் நிதிமன்றத்தில் ஒப்படைத்தனர் அப்போதைய தங்கநகைகள் மதிப்பு தொண்ணுறு லட்சம் வெள்ளி நகைகள் மற்றும் ஜாதி கற்கள் இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் மதிப்பு உடையவை தங்க நகைகளை உரிமை கோரி யாரும் முன் வராத்ததால் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார் மேற்படி உத்தரவுக்கு எதிராக குமரி மாவட்ட திருக்கோவில்கள் சுசிந்திரம் இணை ஆணையர் சென்னைமதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் உயர்நீதிமன்றம் உரிய வழிமுறைகள் பின்பற்றி மனுதாக்கல் செய்து நகைகளை பெற்றுக் கொள்ள உத்தரவிட்டார் பின்னர் தங்க நகைகள் உரிமை கோரி சுசிந்திரம் இணை ஆணையர் பத்மநாபபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்ற உத்தரவின் மேல் மேல்முறையீடு வழக்கு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் மேற்படி வழக்கு பத்மநாபபுரம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்த வழக்கை விசராணை செய்த மாவட்ட அமர்வு நீதிபதி பரமசிவதாஸ் திருவட்டார் ஸ்ரீ ஆதிகேசவன் கோயிலுக்கு சொந்தமான நகைகளைகுமரிமாவட்ட திருக்கோவில்கள் சுசிந்திரம் இணை ஆணையர் பெற்று கொள்ள உத்தரவிட்டார்.

# பொன்மனையில் விவசாயி வீட்டில் ரப்பர் ஷீட் திருடி கொலை மிரட்டல் விடுத்த இளைஞருக்கு முன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கி பத்மநாபபுரம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது

அழகிய மண்டபம்
ஜூலை 30

பொன்மனையில் விவசாயி வீட்டில் ரப்பர் ஷீட் திருடி கொலை மிரட்டல் விடுத்த இளைஞருக்கு முன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கி பத்மநாபபுரம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது

பொன்மனை மங்கலம் பகுதியை சார்ந்த பிரபாகரன் நாயர்மகன் பாலசந்திரன் நாயர் (வயது 66) இவர் கடந்த 30.1.2024 ம்தியதிதனதுவிட்டிற்க்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்க்கு கடைக்கு சென்று விட்டு திரும்பி வரும் வரும் போது திற்பரப்பு நக்கிராண்டி விளை பகுதியை சார்ந்த அச்சுதன் மகன் ஜெகன் (வயது 40)என்பவர் பாலசந்திரன் நாயர் கழுத்தில் கத்தியை வைத்து உன் வீட்டில் றப்பர் சீட் திருடியதை போலிஸில் புகார் கொடுப்பியா என்று கேட்டு அவரின் சட்டைபையில் இருந்த ருபாய் 450 எடுத்து விட்டு கொலை மிரட்டல் விடுத்து சென்றார் இச்சம்பவம் குறித்து பாலசந்திரன் நாயர் குலசேகரம் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தார்வழக்கு பதிவு செய்த போலிசார் குற்றவாளி ஜெகனை கைது செய்தனர்

அவர் கூறிய தகவலின் பெயரில் காப்புகாடு மாராயபுரம் பாறவிளை பகுதியை சார்ந்த பாலையன் மகன் மகேந்திரகுமார்(வயது 51) அவரும் இச்சம்பவத்திற்க்கு தொடர்பு உண்டு என்று கூறியதால் இரண்டாவது குற்றவாளியாக மகேந்திரகுமாரயயும் சேர்க்கப்பட்டு போலிசார் இருவரையும் கைது செய்தனர் இவ்வழக்கு பத்மநாபபுரம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது வழக்கை விசராணை செய்த மாவட்ட அமர்வு நீதிபதி பரமசிவதாஸ் முதல் குற்றவாளி ஜெகன்க்கு முன்று பிரிவின் கிழ் முன்று வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும் ருபாய் முவாயிரம் அபராதவும் விதித்து தீர்ப்பு வழங்கினார் இரண்டாவது குற்றவாளி மகேந்திரகுமார் மீது அரசு தரப்பில் குற்றம் நீருபிக்காத்த காரணத்தால் அவர் விடுதலை செய்யப்பட்டார் இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர் பெஞ்சமின் ரொனால்டு ராபின்சன் ஆஜரானார்.

தின தமிழ் நாளிதழில்
விளம்பரம் செய்து
பயன் பெறுங்கள் !

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.